நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2024

## உயர்நிலைப் பிரிவு (ஆண்டு 11 & 12)

## Advanced Level (Year 11 & 12)

வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள் (+10 நிமிடங்கள் வாசிப்பு நேரம்)

Time Given : 120 Minutes (+10 Minutes Reading Time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

Aug 2024

**வினாக்கள்: 1–30** **(மதிப்பெண்கள் 1 X 30=30)**

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. முத்தமிழ் எனப்படுபவை
   (அ) கவிதை, சிறுகதை, நாவல் (ஆ) எழுத்து, சொல், வாக்கியம்
   (இ) இயல், இசை, நாடகம் (ஈ) அறம், பொருள், இன்பம்

2. ‘அரிது அரிது மானிடராதல் அரிது...’ என அழகாக எடுத்துக்கூறியவர்.
   (அ) திருவள்ளுவர் (ஆ) பாரதியார்
   (இ) ஔவையார் (ஈ) தொல்காப்பியர்

3. நானிலத்தில் அடங்காதது
   (அ) பாலை (ஆ) முல்லை
   (இ) குறிஞ்சி (ஈ) மருதம்

4. பின்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடர் அல்லாதது.
   (அ) அழகிய பெண் (ஆ) முற்றிய காய்
   (இ) உயர்ந்த மரங்கள் (ஈ) அடித்து நின்றாள்

5. இடையின மெய் எழுத்துகள் எவை?
   (அ) க், ச், ட் , த் , ப் , ற் (ஆ) ய் , ர் , ல், வ் , ழ் , ள்
   (இ) ங், ஞ், ண், ன், ந், ம், ன் (ஈ) க், ச், ய், ர், ங், ஞ்

6. உயர்ந்த மனிதன் கனிந்த பழத்தைச் சுவைத்து உண்டான் என்பதில் எழுவாய் அடைமொழி.
   (அ) சுவைத்து (ஆ) கனிந்த
   (இ) உயர்ந்த (ஈ) பழத்தை

7. பின்வருவனவற்றுள் உயர்திணை பலர்பால் எழுவாயாக அமையப்பெற்ற வாக்கியம்.
   (அ) ஆசிரியர் சங்கக் கூட்டத்திற்குச் சென்றார்
   (ஆ) அறிஞர்கள் கூடி முடிவெடுத்தனர்
   (இ) அவர் கூட்டத்திற்குச் சென்றார்
   (ஈ) நீ அறிஞர்களை அனுசரித்து வாழ வேண்டும்

8. ஒரு தலைப்புச் சார்ந்து இரு அணிகளுக்கிடையில் விவாதம் நடைபெறும் இடம்.
   (அ) விளையாட்டுத்திடல் (ஆ) பட்டிமன்றம்
   (இ) நிர்வாகக்கூட்டம் (ஈ) கோயில்

9. கட்டுரையின் பிரதான பகுதிகளாக அமையாதது.

(அ) முகவுரை (ஆ) விளிப்பு
(இ) தொடருரை (ஈ) முடிவுரை

10. பின்வருவனவற்றில் துளைக்கருவி ஏது?

(அ) தாளம் (ஆ) புல்லாங்குழல்
(இ) மிருதங்கம் (தண்ணுமை) (ஈ) வீணை

11. எத்தனையாவது ஆண்டு நிறைவில் பவளவிழா கொண்டாடப்படும்?

(அ) 10வது ஆண்டு (ஆ) 30வது ஆண்டு
(இ) 75வது ஆண்டு (ஈ) 80வது ஆண்டு

12. 'முதியவர் குளிரால் நடுநடுங்கினார்.' இங்கு நடுநடுங்கினார் என்பது

(அ) அடுக்குத் தொடர் (ஆ) மரபுத்தொடர்
(இ) இணைமொழி (ஈ) அடுக்கிடுக்குத் தொடர்

13. கோவலனை இழந்த கண்ணகி .................. காட்சியளித்தாள்.

(அ) விருப்பு வெறுப்புற்று (இ) கண்ணீரும் கம்பலையுமாக
(ஆ) மூச்சுப்பேச்சற்று (ஈ) கன்னங்கரேலென

14. எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பது நல்லது....... மகிழ்ச்சி எப்போதும் நிலையாக இருப்பதில்லை.

(அ) ஆகவே (ஆ) எனவே
(இ) ஆனால் (ஈ) அதனால்

15. 'வாழ்வில் நம்பிக்கை இல்லாதவன் முன்னேறுதல் இயலாதது'.
நம்பிக்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

(அ) அவநம்பிக்கை (ஆ) தன்நம்பிக்கை
(இ) தும்பிக்கை (ஈ) உறுதி

16. 'கல்வியின் அனுகூலம் பற்றி மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்'
இங்கு அனுகூலம் என்பதன் எதிர்ப்பதம்

(அ) நன்மை (ஆ) தன்மை
(இ) பிரதிகூலம் (ஈ) ஆச்சரியம்

17. 'தக்க சமயம் வரும்போது அதைத் தவறவிடக்கூடாது' என்ற கருத்தைத் தரும் பழமொழி

(அ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை (ஆ) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
(இ) நிழலின் அருமை வெயிலில் தெரியும் (ஈ) விரலுக்குத்தக்க வீக்கம்

18. ‘அடிநாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்’ என்ற ஆன்றோர் வாக்கின் கருத்து.

(அ) உதவுங் குணங்கொண்டவர்கள் நேரம் காலம் பார்க்காமல் மற்றவர்களுக்கு உதவுவர்

(ஆ) நெஞ்சில் வஞ்சகத்தை வைத்துக்கொண்டு இனிமையாகப் பேசுதல்

(இ) அடிநாக்கு கசப்பாகவும் நுனி நாக்கு இனிப்பாகவும் இருக்கும்

(ஈ) நாக்கு இல்லாவிட்டால் சுவைக்க முடியாது

19. ‘பழகப்பழகப் பாலும் புளிக்கும்’ என்பதை உணர்த்துவது.

(அ) பாலைத்தொடர்ந்து குடித்தால் புளித்து விடும்

(ஆ) பாலை முதலில் குடிக்கும் போது முதலில் இனிக்கும் கடைசியில் புளிக்கும்

(இ) ஒரு வேலையைத் தொடர்ந்து செய்தால் சலிப்பு ஏற்படும்

(ஈ) நேரம் செல்ல செல்லப் பால் புளித்து விடும்

20. ‘நிறைகுடம் தளும்பாது’ என்ற பழமொழியின் கருத்து.

(அ) நிறைகுடம் வைத்தால் நன்று குறைகுடம் வைத்தால் நன்றன்று

(ஆ) குடத்திற்குள் நிறைவாக நீர் இருந்தால் குடம் அசையாது

(இ) அறிவு நிறைந்தவர்கள் தற்பெருமை பேச மாட்டார்கள்

(ஈ) நிறைகுடம், குறைகுடம் இரண்டும் சிறந்தது

21. ‘அகமும் புறமும்’ என்னும் இணைமொழிக்கு ஏற்ற சொற்பதம்

(அ) மன உணர்வும் வஞ்சக எண்ணமும்

(ஆ) பாகுபாடும் வஞ்சக எண்ணமும்

(இ) பாகுபாடும் வெளித்தோற்றமும்

(ஈ) மன உணர்வும் வெளித்தோற்றமும்

22. ............................. வரும் நம் உணவுப்பழக்கம் நம்மைப் பல கொடிய கிருமித் தொற்றுகளில் இருந்து பாதுகாக்கின்றது.

(அ) இடக்கு மிடக்காக (ஆ) அரக்கப் பரக்க

(இ) பழகப் பழக (ஈ) வாழையடி வாழையாக

23. ‘கனி எதையும் மேலோட்டமாகத்தான் படிப்பாள்.’
இதனை உணர்த்துவதற்குப் பொருத்தமான மரபுத்தொடர்.

(அ) மாரடித்தல் (ஆ) நுனிப்புல் மேய்தல்

(இ) அரைப்படிப்பு (ஈ) வீண்விரயம் செய்தல்

**பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.**

24. நீ என் வார்த்தையைக் கேட்டிருந்தால் இவ்வளவு துன்பமும் ......................

(அ) வந்திருக்காது (ஆ) வரவில்லை

(இ) வருகிறது (ஈ) வந்ததில்லை

25. எல்லோரும் கூட்டத்திற்கு வந்திருந்த போதிலும் அவன் மட்டும் ......................

(அ) வருவான் (ஆ) வருகிறான்

(இ) வரமாட்டான் (ஈ) வரவில்லை

**சரியான சொல்லைத் தெரிவு செய்க**

26. (அ) மெய்வல்லுனர் (இ) மெய்வழ்முனர்

(ஆ) மெய்வள்ளுனர் (ஈ) மெய்வல்லுணர்

27. (அ) அனுசரணை (இ) அணுசரனை

(ஆ) அணுசரணை (ஈ) அநுசரனை

28. (அ) சமயல் (இ) சமெயல்

(ஆ) சமையல் (ஈ) சமையள்

29. (அ) முண்னூறு (இ) முந்னூறு

(ஆ) முன்நூறு (ஈ) முந்நூறு

30. (அ) அநியாயம் (இ) அணியாயம்;

(அ) அனியாயம் (ஈ) அந்நியாயம்

**பின்வரும் பந்தியில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழச் சொற்களை எழுதுக.**

**(2 X 7 = 14 புள்ளிகள்)**

புகழவன் தன் அலுவலகத்திற்கு (31) E-mail ஒன்றை அவசரமாக அனுப்புவற்கு முயன்று கொண்டிருந்தான். எனினும் அவனது (32) computerஇல் (33) Internet இணைப்பு சரியாகக் கிடைக்கவில்லை. தனது சகோதரியின் (34) Laptopஐ பயன்படுத்தலாம் என்றால். அவள் அதில் (35) Facebook பார்த்துக் கொண்டிருந்தாள். (36) Telephone மூலம் தகவலைத் தெரியப்படுத்துவது நல்லது எனக் கருதி புகழவன் (37) Mobile Phoneஐ எடுத்துத் தகவலைத் தெரிவித்தான்.

**வினாக்கள்: 38 – 42**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளை முழுமையான வசனத்தில் எழுதுக. (20 புள்ளிகள்)**

**அழிவின் விளிம்பில் பொம்மலாட்டம்**

தமிழர்களின் மிகப் பழமையான மரபு வழிக் கலைகளில் பொம்மலாட்டமும் ஒன்று. மரப்பாவைக் கூத்து, பாவைக் கூத்து என்ற பெயர்களாலும் இக்கலை அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் இதிகாசங்கள், புராணங்கள் எனப் பல கதைகளைச் சுவாரசியம் குன்றாமல், நாடக வடிவில் இசையோடு பார்வையாளர்களை மகிழ்விப்பர். ஆங்கிலேயர் ஆட்சியின் போது, மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டப் பல வழிகள் இருந்தன. ஆனால் அவற்றை எல்லாம் ஆங்கிலேய அரசின் கிடுக்குப்பிடியினால் பின்பற்ற இயலவில்லை. அப்போது பொம்மலாட்டம், கிராமிய பாடல்கள் போன்ற மரபு வழிக் கலைகள் மூலம் மக்களுக்கு விடுதலையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

திரைப்படத் துறையின் அதீத வளர்ச்சியால், தமிழகத்தில் தொன்மையான பாரம்பரியக் கலையான பொம்மலாட்டம் படிப்படியாக அழிந்து வருகிறது. தமிழகத்தின் அடையாளமே கலைகள்தான். அதிலும், பாரம்பரியக் கலையான பொம்மலாட்டத்தின் வரலாறு நீண்டது. கல்யாண முருங்கை மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளுக்கு நூலைக் கட்டி, திரைக்குப் பின்னால் இயக்கியபடி இதிகாசத்தையும் புராணக் கதைகளையும் அரங்கேற்றும் பொம்மலாட்டம், பல நூற்றாண்டுகள் பெருமை கொண்டது.

இன்றைய குழந்தைகளுக்குப் பொம்மலாட்டக் கலையைப் பற்றி அதிகமாகத் தெரியாது. பெரும்பாலனவர்களுக்குத் தெரிந்த கலை சினிமா, ஆனால் இந்த சினிமாக்களுக்கும் அதில் நீங்கள் காணும் ‘அனிமேசன்களுக்கும்’ முன்னோடிகளாக விளங்குவது பொம்மலாட்டம். கல்யாண முருங்கை அல்லது முள் முருங்கை என்று அழைக்கப்படும் மரத்தின் கட்டைகளை நீரில் ஊற வைத்து, நன்கு உலர்ந்த பிறகு பொம்மைகளின் உருவங்களைத் தனித்தனியாக வெட்டியெடுத்துச் செதுக்குவர். உறுப்புகளைக் கயிறுகளால் இணைப்பர். இந்தப் பொம்மைகள் 45 முதல் 90 சென்டி மீற்றர் வரை இருக்கும். பழங்காலங்களில் மஞ்சள் நிற வர்ணம் மட்டுமே தீட்டுவர். பிறகு கதாபாத்திரங்களுக்கு தகுந்தாற்போல் வர்ணங்கள் தீட்டுவர். பொம்மலாட்டத்தில் மொத்தம் 9 கலைஞர்கள் பங்கேற்பர். இவர்களில் நால்வர் பொம்மைகளை இயக்குவர் மற்ற நால்வர் இனசயமைப்பர். ஒருவர் உதவியாளராக இருப்பார்.

தலை, கைகளில் கயிறுகட்டி, கால்கள் இல்லாமல் துணிகளால் நீளமாக உடைகொடுத்து இந்த பொம்மைகளைத் திரைக்குப் பின் இருந்து ஆட்டி வைப்பர். கயிற்றை லாவமாக ஆட்டி அதன் அசைவுக்குத் தக்கவாறு பாடி நடிக்கவைப்பர். திரைக்குப் பின்னால் ஆர்மோனியம், டோலக், ஜால்ரா, சிப்ளோகட்டை, தாளம் வாசித்து, இசைக்குழுவினர் இசை கொடுக்க, பொம்மைகளை அதற்கேற்ப ஆட்டுவிக்கும் போது, பின்பாட்டும் சேர, ஏதோ பொம்மைகள் பாடுவது போல ஒரு பிரமிப்பான உணர்வைக் காண்போருக்கு ஏற்படுத்தும். சில ஆண்டுகளுக்கு முன் பிரபலமாக இருந்த இந்தக் கலை தற்போது மெல்ல… மெல்ல… அழிந்து வருகிறது. ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்ட தொழிலில் தற்போது விரல் விட்டு எண்ணும் அளவிற்கே கலைஞர்கள் ஈடுபடுவது வருத்தம் அளிக்கிறது.

38. பொம்மலாட்டம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

39. பொம்மலாட்டப் பொம்மைகளை எவ்வாறு வடிவமைக்கிறார்கள்? (3 புள்ளிகள்)

40. பொம்மலாட்டக் கலை அழிந்து வருவதற்கான முக்கிய காரணங்களை விளக்குக? (5 புள்ளிகள்)

41. பண்டைய காலத்தில் பொம்மலாட்டத்தை எவற்றிற்குப் பயன்படுத்தினார்கள்? (4 புள்ளிகள்)

42. அழிந்து வரும் இக்கலையை எவ்வாறு பாதுகாக்கலாம் விளக்குக? (6 புள்ளிகள்)

**பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக. (1 X 10 = 10 புள்ளிகள்)**

கபிலன் (நேற்றைக்கு) 43.......................... தமிழ் (ஸ்கூல் ) 44.......................... (வந்தவன்) 45 ..........................

(கபிலனோட) 46 .......................... (அவன்ர) 47 .......................... (தங்கச்சியும்) 48 .......................... (வந்தவா) 49 ..........................

(அவா) 50 .......................... (பிறீஸ்கூலில்) 51 .......................... (படிக்கிறவா) 52 ..........................

**பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. (25 புள்ளிகள்)**

01. மனிதர்கள் மேன்மையுடன் வாழக் கூறப்படும் வாழ்க்கை நெறிமுறைகளை, விழுமியங்கள் எனலாம். உலகில் வாழும் மனித சமூகங்கள் அவர்களின் வாழ்க்கைமுறை, இறைநம்பிக்கை, விழாக்கள், பின்பற்றும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் வேறுபடுகின்றனர். இந்த அடிப்படையில் தமிழர் விழுமியங்கள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

02. இன்றைய மாணவரிடையே தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக வாசிப்புக்குக்கலை அருகி வருகிறது. இதனால் மாணவர்களின் மொழி வளர்ச்சியும் மொழியாட்சியும் மிகவும் மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறன. வாசிப்பின் அவசியம் பற்றி உமது பாடசாலை (பள்ளிக்கூட) மாணவர்களின் மத்தியில் நீர் ஆற்றவுள்ள உரையை எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

உயர்நிலைப் பிரிவு
**Advanced Level**

சுட்டிலக்கம் :
Index Number :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அ | ஆ | இ | ஈ | 20. | அ | ஆ | இ | ஈ |
| 2. | அ | ஆ | இ | ஈ | 21. | அ | ஆ | இ | ஈ |
| 3. | அ | ஆ | இ | ஈ | 22. | அ | ஆ | இ | ஈ |
| 4. | அ | ஆ | இ | ஈ | 23. | அ | ஆ | இ | ஈ |
| 5. | அ | ஆ | இ | ஈ | 24. | அ | ஆ | இ | ஈ |
| 6. | அ | ஆ | இ | ஈ | 25. | அ | ஆ | இ | ஈ |
| 7. | அ | ஆ | இ | ஈ | 26. | அ | ஆ | இ | ஈ |
| 8. | அ | ஆ | இ | ஈ | 27. | அ | ஆ | இ | ஈ |
| 9. | அ | ஆ | இ | ஈ | 28. | அ | ஆ | இ | ஈ |
| 10. | அ | ஆ | இ | ஈ | 29. | அ | ஆ | இ | ஈ |
| 11. | அ | ஆ | இ | ஈ | 30. | அ | ஆ | இ | ஈ |
| 12. | அ | ஆ | இ | ஈ | 31. | | | | |
| 13. | அ | ஆ | இ | ஈ | 32. | | | | |
| 14. | அ | ஆ | இ | ஈ | 33. | | | | |
| 15. | அ | ஆ | இ | ஈ | 34. | | | | |
| 16. | அ | ஆ | இ | ஈ | 35. | | | | |
| 17. | அ | ஆ | இ | ஈ | 36. | | | | |
| 18. | அ | ஆ | இ | ஈ | 37. | | | | |
| 19. | அ | ஆ | இ | ஈ | | | | | |

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

உயர்நிலைப் பிரிவு
**Advanced Level**

சுட்டிலக்கம் :
Index Number :

38. ______________________________

39. ______________________________

40. ______________________________

41. ______________________________

42. ______________________________

43. ______________ 48. ______________

44. ______________ 49. ______________

45. ______________ 50. ______________

46. ______________ 51. ______________

47. ______________ 52. ______________

உயர்நிலைப் பிரிவு
Advanced Level

சுட்டிலக்கம் :
Index Number :

53. கட்டுரை எழுதுதல்;

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்

ANSWER SHEET

2024

உயர்நிலைப் பிரிவு

**Advanced Level**

சுட்டிலக்கம் :

**Index Number :**